## பிரிவு 4

## ஆய்வுமுறை

### வினாப்பட்டி மூலம் தகவல் திரட்டுதல்

**1.4.1.** மாநில நிதி ஆணையம், இந்த வகையிலான முதல் ஆணையமாக இருப்பதால், தானே சொந்தமாக நடைமுறைகளையும், ஆய்வு முறைகளையும் வகுத்துக் கொண்டது. முதல் நடவடிக்கையாக, இந்த ஆணையம், கணனிகள் மூலம் வகைப்படுத்துவதற்கு ஏதுவாக படிவங்கள் மற்றும் வினாப்பட்டியல்கள் மூலமாக தகவலைச் சேகரித்தது. இவ்வினாப்பட்டியல்கள் ஊரகப் பகுதி உள்ளாட்சி மன்றங்களைப் பொறுத்தவரையில் 31.3.94வுடன் முடிவடைந்த ஐந்தாண்டுகளுக்கும் நகர்ப்பகுதி உள்ளாட்சி மன்றங்களைப் பொறுத்தவரையில் 31.3.94வுடன் முடிவடைந்த மூன்றாண்டுகளுக்கும் நிதி ஆதாரம் மற்றும் செலவு குறித்த தகவல்களைத் திரட்டுகின்ற வகையில் விரிவான முறையில் தயாரிக்கப்பட்டிருந்தன. குடிமைப்பணிகளின் அளவுகள், அடிப்படை வசதிகள் பராமரிப்பு, பணியாளர் அமைப்பு, நிதி திரட்டுதல், கொடுத்துத் தீர்க்கப்படாத பொறுப்புகள், மேம்பாட்டுக்காக உள்ளாட்சி மன்றங்களிடமிருந்து கருத்துக்கள் பெறுதல் ஆகியவை இத்தகவல்களில் அடங்கும். சோதனை முறையில், இவ்வினாப்பட்டியல்கள் திருநெல்வேலி, சிதம்பரனார், மதுரை, பசும்பொன் முத்துராம லிங்கத்தேவர், அண்ணா ஆகிய மாவட்டங்களில் சோதித்து சரிபார்க்கப்பட்டன. மாநில நிதி ஆணையம் இவற்றை ஏற்று பின்பற்றுவதற்கு முன்பு, சென்னை வளர்ச்சிப் பணி ஆய்வு நிறுவனத்தின் ஓய்வு பெற்ற பேராசிரியர் திருவாளர் டாக்டர். எஸ்.குகன், புதுடெல்லி, திட்டக்குழுவைச் சேர்ந்த டாக்டர் D.N. பாசு ஆகியோரிடமிருந்தும் ஏனைய மாநில அலுவலர்களிடமிருந்தும், வல்லுநர்களிடமிருந்தும் கருத்துக்கள் பெறப்பட்டன.

**1.4.2.** அச்சிடப்பட்ட வினாப்பட்டியல்கள் தமிழில் தயாரிக்கப்பட்ட வழிகாட்டிக் குறிப்புகளுடன் பின்வருமாறு, பல்வேறு உள்ளாட்சி மன்றங்களுக்கு அனுப்பப்பட்டு அவற்றிடமிருந்து தகவல்கள் கோரப்பட்டன.

| | | எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | ஊராட்சிகள் | 12, 584 |
| 2. | ஊராட்சி ஒன்றியங்கள் | 384 |
| 3. | மாவட்ட பஞ்சாயத்துகள் | 28 |
| 4. | பேரூராட்சிகள் | 635 |
| 5. | நகராட்சிகள் | 104 |
| 6. | மாநகராட்சிகள் | 6 |

**1.4.3.** இத்துடன், மாவட்ட நிலையியல் சம்பந்தப்பட்ட அனைவருக்கும் இவ்வினாப் பட்டியல்களைப் பூர்த்தி செய்வதற்கு விரிவான பயிற்சி வகுப்புகள் நடத்துவதற்காக, மாநில நிதி ஆணையத்தின் அதிகாரிகள் அனைத்து மாவட்டங்களுக்கும் அனுப்பப்பட்டனர். உள்ளாட்சி மன்றங்கள் வினாப்பட்டியல்களை நிரப்பிய பின்பு, பேரூராட்சிகளின் உதவி இயக்குநர்கள், நகராட்சி நிருவாகத்தின் மண்டல இயக்குநர்கள், கோட்ட வளர்ச்சி அதிகாரிகள், சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சியர்களின் நேர்முக உதவியாளர்கள் (P.D.) ஆகியோர் தங்களின் கட்டுப்பாட்டின் கீழ் வரும்

அமைப்புகள் தொடர்பான தகவல்களை மீண்டும் சரிபார்த்தனர். பூர்த்தி செய்யப்பட்ட வினாப்பட்டிகளை மாநில நிதி ஆணையத்திற்கு அனுப்புவதற்கு முன்னர், ஆணையத்தின் பணியாளர்கள், அவை சரியாக தயாரிக்கப்பட்டுள்ளதை உறுதி செய்வதற்காக இங்கொன்றும், அங்கொன்றுமாக சோதனை செய்தனர். அதே நேரத்தில் நிலவரி, உள்ளூர் செஸ்வரி, உள்ளூர் செஸ் மேல்வரி, பற்றிய கேட்பு வசூல் விவரங்கள், உள்ளூர் செஸ்வரி மற்றும் உள்ளூர் செஸ் மேல்வரி சரிகட்டல், நிலவரி தள்ளுபடி, உள்ளாட்சி மன்றங்களுக்கு இழப்பீடு ஏதேனும் ஏற்பட்டிருந்தால், அந்த இழப்பீடு ஆகிய விவரங்களைப் பெறுவதற்காக வட்டாட்சியர்களுக்கும், மாவட்ட ஆட்சியர்களுக்கும் தனியாக வினாப்பட்டியல்கள் அனுப்பப்பட்டன.

**1.4.4.** உள்ளாட்சி மன்ற அமைப்பு முறையை சீரமைப்பது தொடர்பாக, சீர் பெருமக்கள், வல்லுநர்கள், அரசு சாராத அமைப்புகள், பொதுமக்கள் ஆகியோரின் கருத்துக்களையும் ஆலோசனைகளையும் பெறுவதற்காக அதற்கான வினாப்பட்டிகள் சுமார் 25, 000 பிரதிகள் தயாரிக்கப்பட்டு மாவட்ட ஆட்சியர்கள்/ உள்ளாட்சி மன்றங்கள் வாயிலாக அனுப்பப்பட்டது. இது தொடர்பாக தங்களது கருத்தைத் தெரிவிக்க விரும்பும் பொதுமக்கள் இவ்வினாப்பட்டியல்கள் எங்கு கிடைக்கும் என்பது பற்றிய தகவல்களை நாளிதழ்களில் வெளியிடப்பட்டது; சீர் பெருமக்கள், வல்லுநர்கள், அரசு சாரா அமைப்புகளுக்கான வினாப்பட்டியல்கள் விரிவான துண்டு வெளியீடுகளுடன் தபால் மூலம் அல்லது தனியாட்கள் மூலமும் அனுப்பி வைக்கப்பட்டன.

## ஆழ்ந்த ஆய்வு (Indepth Study)

**1.4.5.** தமிழ்நாடு மாநில நிதி ஆணையம், உள்ளாட்சி மன்றங்களில் வரி செலுத்துவோரையும், பயனடைவோரையும், அரசு சாராத அமைப்பு மூலம் அணுகி ஆழ்ந்த ஆய்வு ஒன்றை நடத்தியது. ஏனெனில், முன்னதாக, அதிகாரிகள், அறிஞர்கள், மற்றும் ஏனைய சான்றோர்களிடமிருந்துதான் வினாப்பட்டியல்கள் மூலம் தகவல்கள் திரட்டப்பட்டன. அத்தகவல் சாதாரண மக்களிடமிருந்து பெறப்படவில்லை. பொருளாதார மேதை டாக்டர் இராஜா ஜே. செல்லையா, மாநில திட்டக்குழுவின் முழு நேர உறுப்பினர் டாக்டர் பழனிதுரை, சென்னை பொருளாதாரவியல் ஆய்வு நிறுவன இயக்குநர் டாக்டர் சங்கர் ஆகியோருடன் கலந்து ஆலோசித்து எட்டு மாவட்டங்கள் தெரிந்தெடுக்கப்பட்டு அவற்றிலிருந்து, இணைப்பு–3ல் விவரித்துள்ளபடி, பத்து நகராட்சிகள், இருபத்தைந்து பேரூராட்சிகள், இருபத்தைந்து ஊராட்சி ஒன்றியங்கள் மாதிரி ஆய்விற்காகத் தேர்ந்தேடுக்கப்பட்டன. மாவட்டங்களைத் தேர்ந்தெடுப்பதற்குப் பின்பற்றப்பட்ட அளவுகோல்கள் வருமாறு:–

1. தொழில்கள் நிறைந்த நகர்ப் பகுதி
2. வேளாண்மை வளம் உள்ளவை
3. வறட்சியான மாவட்டங்கள்
4. வர்த்தகம்/வாணிப நடவடிக்கைகள் உள்ளவை
5. மலைப்பகுதிகள்

**1.4.6.** ஆழ்ந்த ஆய்வினை மேற்கொள்ளும் பணி சம்மந்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவர்களிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. இவர்களுக்கு (1) சென்னை, சமூகப்பணி ஆராய்ச்சி மையம் (2) கோயம்புதூர், தருமபுரி புள்ளியில் துறை உதவி இயக்குநர்கள் (3) நீலகிரி, ஊரக வளர்ச்சி நிறுவனம் (4) திருச்சிராப்பள்ளி பாரதிதாசன் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த பொருளாதாரத்துறை (5)பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டம்–காரைக்குடி அழகப்பா பல்கலைக் கழகம் (6) நாகை காயிதேமில்லத் மாவட்டம் அம்மாவட்டத்தைச் சேர்ந்த நேரு யுவ கேந்திரா (7) கன்னியாகுமரி மாவட்டம் மார்த்தாண்டத்திலுள்ள ஒய்.எம்.சி.ஏ. நிறுவனம் ஆகியன உதவி புரிந்தன. மேற்சொன்ன

முகவரமைப்புகள், மாநில நிதி ஆணையத்தின் அலுவலகத்திற்கு அழைக்கப்பட்டு அவர்களுக்கு ஒருநாள் பயிற்சி அளிக்கப்பட்டது. சென்னை பொருளாதார ஆராய்ச்சி நிறுவனத்தின் உதவியுடன் தயாரிக்கப்பட்ட பல்வேறு (அடுக்குமுறை) உள்ளாட்சி மன்றங்களுக்குப் பொருந்துகின்ற வகையில் தனிப்பட்ட முறையில் வடிவமைக்கப்பட்ட வினாப்பட்டியல்கள் அந்த முகவரைமைப்புகளுக்கு வழங்கப்பட்டன. இந்த ஆய்வுகளை நடத்துவதற்காக, இந்த முகவரமைப்புகளுக்கு ஆன செலவுகளுக்கு அரசு தாரளமாக அனுமதி வழங்கியது. கீழே விவரிக்கப்பட்டுள்ளவாறு வேளாண்மை, நில உடமை, சுயமாகத் தொழில் செய்து வரி செலுத்துவோர், வரிசெலுத்தாதோர் போன்ற தொழில்முறைகளுக்கேற்றவாறு மதிப்பளித்து சுமார் 2500 மாதிரிகள் (அல்லது வீடுகள்) ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட்டன.

| | | | |
|---|---|---|---|
| 1. | 25 ஊராட்சி ஒன்றியங்களுக்கு (ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் ஒரு ஊராட்சிக்கு 10 தொண்டு நிறுவனங்கள், மாதிரிகள் வீதம் 4 ஊராட்சிகள்) | – | 1000 மாதிரிகள் |
| 2. | 25 பேரூராட்சிகளுக்கு (ஒவ்வொன்றுக்கும் 20 மாதிரிகள்) | – | 500 மாதிரிகள் |
| 3. | 10 நகராட்சிகள் (ஒவ்வொன்றுக்கும் 50 மாதிரிகள்) | – | 500 மாதிரிகள் |
| 4. | 3 மாநகராட்சிகள் (சென்னை 300 மற்ற இரண்டில் ஒவ்வொன்றுக்கும் 100) | – | 500 மாதிரிகள் |
| | மொத்தம் 8 மாவட்டங்களில் | – | 2500 மாதிரிகள் |

**1.4.7.** வினாப்பட்டிகள் மூலமும் உள்ளூர் மக்களை சந்தித்து, பேட்டி காண்பதன் மூலமும் முகவரமைப்புகள் மூலம் இந்த ஆய்வை மேற்கொண்டன. இந்த முகவரமைப்புகளின் பணியை 21.3.96 அன்று அப்பணி முடிவடையும் வரையில், அவ்வப்போது, தமிழ்நாடு நிதி ஆணையம் ஆய்வு செய்தது.

புள்ளிவிவர தகவல் பதிவும் அட்டவணையிடலும்:

**1.4.8.** ஆழ்ந்த ஆய்வின்போது உள்ளாட்சி மன்றங்கள், பொதுமக்கள், சீர்பெருமக்கள், தொண்டு நிறுவனங்கள் , வரி செலுத்துவோர், பயன்பெற்றோர்கள்ஆகியோர் தெரிவித்த புள்ளிவிவரத் தகவல்களும், கருத்துக்களும் அடங்கிய நிரப்பப்பட்ட வினாப்பட்டியல்கள், தமிழ்நாடு மாநில நிதி ஆணைய அலுவலகத்தில் பெறப்பட்டு, பிரிக்கப்பட்டு, அந்தந்த நிலைகளைக் கண்டறிவதற்கு ஏதுவாக, தேவையான குறியீட்டு எண்கள் கொடுத்து அட்டவணையிடப்பட்டன. பின்னர், அவை சென்னை, அரசு புள்ளிவிவரத் தகவல் தொகுப்பு மையத்திற்கு கணினிமயமாக்குவதற்கும், அங்கு சேமித்து வைப்பதற்காகவும் அனுப்பப்பட்டன. புள்ளி விவரங்கள் பெருமளவில் வரப் பெற்றுள்ளதைக் கருத்திற்கொண்டு வினாப்பட்டியல்களில் கொடுக்கப்பட்டிருந்த பதில்களில் கண்டுள்ள புள்ளிவிவரங்களை கணினியில் பதிவு செய்யும் பணியினை மேற்கொண்ட சென்னை, அரசு புள்ளி விவரத் தகவல் தொகுப்பு மையத்தில் புள்ளிவிவரத் தகவல்களைப் பதிவு செய்யும் ஒவ்வொரு பணியாளர்களுக்கும் (Data Entry Operators) மதிப்பூதியம் வழங்க அரசு நிதித் (நிதி ஆதாரங்கள்) துறையின் 8.11.95 ஆம் நாளிட்ட, 768 ஆம் எண் அரசாணையில் அனுமதி வழங்கப்பட்டது. எனினும்,

சென்னை, அரசு புள்ளி விவரத் தகவல் தொகுப்பு மையம் ஏற்கெனவே பிறவகையான பணிகளை மேற்கொண்டிருந்த காரணத்தால், 19 மாவட்டங்கள் சம்பந்தப்பட்ட ஊராட்சிகளுக்குரிய புள்ளி விவரங்களைப் பதிவு செய்யும் பணி, அரசிடமிருந்து தேவையான அனுமதியைப் பெற்றபின்பு, தனி முகவரமைப்பு மூலம் செய்து முடிக்கப்பட்டது .

**1.4.9.** புள்ளி விவரங்களை வகைப்படுத்தி, பல்வேறு அளவுகோல்களுக்கேற்ப சரியொப்புமைப்படுத்தும் பணி, டாக்டர் இராஜா ஜே. செல்லையா அவர்கள் தலைமையில் அமைந்த சென்னை பொருளாதார ஆராய்ச்சி நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டது. அரசு, நிதித்துறையின் (ஆதாரங்கள்) 27.9.95 ஆம் நாளிட்ட, 694 ஆம் எண் அரசாணையில் தேவையான நிதியொதுக்கத்திற்கும், பணியை அவர்களிடம் ஒப்படைப்பதற்கும் அனுமதி வழங்கியது. மாவட்டங்களில் ஆழ்ந்த ஆய்வினை மேற்கொள்வதற்கு உகந்த படிவத்தையும், புள்ளிவிவரங்களை வகைப்படுத்துவதற்கான அட்டவணை படிவங்களையும் சென்னை பொருளாதார ஆய்வு நிறுவனம் வடிவமைத்திருந்தது.

வரைவு அட்டவணைத் திட்டம், (Tabulation scheme) தெரிந்தெடுக்கப்பட்ட அலுவலர்காளல் தயாரிக்கப்பட்டு, வல்லுநர்கள் அடங்கிய சிறப்புப் பணிக்குழுவால் சரிபார்க்கப்பட்ட பின்னர் இந்த ஆணையத்தால் ஏற்றுக் கொள்ளப்பட்டது. இப்பணியில் ஈடுபட்ட அலுவலர்கள், சிறப்புப்பணிக் குழுவினர் பற்றிய விவரங்கள் இணைப்பு எண்–4ல் கொடுக்கப்பட்டுள்ளன.

**1.4.10.** அட்டவணை திட்டங்கள், கீழே குறிப்பிடப்பட்டுள்ள நாட்களில் ஏற்றுக் கொள்ளப்பட்டன:–

| | | | |
|---|---|---|---|
| 1. | 28.9.95 | – | ஊரகப்பகுதி உள்ளாட்சி மன்றங்களுக்கானது |
| 2. | 9.10.95 | – | நகர்ப்பகுதி |
| 3. | 12.10.95 | – | சீர்பெருமக்கள், பொதுமக்கள் தொண்டு நிறுவனங்களுக்கானது. |

**1.4.11.** பின்னர், அட்டவணைத் திட்டங்கள் பொருள் விளக்கம், மற்றும் பகுப்பாய்விற்கான அறிக்கையை தயாரிப்பதற்காக, சென்னை, அரசு புள்ளிவிவரத் தகவல் தொகுப்பு மையத்திடம் ஒப்படைக்கப்பட்டன. பின்னர் அதன்படி விவரங்கள் எடுக்கப்பட்டு மாநில நிதி ஆணையத்திடமும், சென்னை பொருளாதார ஆராய்ச்சி நிறுவனத்திடமும் ஒப்படைக்கப்பட்டன. இத்தகவல்கள், மாநில நிதி ஆணையத்தின் பல்வேறு பரிந்துரைகளுக்கும் / கருத்துரைகளுக்கும் அடிப்படையாக அமைந்தன.

### பணிக் குழுக்களை (Task Forces) அமைத்தல்

**1.4.12.** மாநில நிதி ஆணையம், உள்ளாட்சி மன்றங்களில் நிதி ஆதாரங்களை பெருக்குதல், தேவை அடிப்படையிலான பணி அளவு, அதற்கு ஆகக் கூடிய செலவு இதனால் ஏற்படும் கூடுதல் பொறுப்புகளை நிறைவேற்றத் தேவையான செயலாக்க அமைப்பு ஆகியவை குறித்து ஒரு ஒருங்கிணைந்த அணுகுமுறையைப் பின்பற்றுவதற்கு ஏதுவாக பின்வருவன குறித்து விரிவான ஆய்வுகளை மேற்கொண்டது:–

1. தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் கட்டாயமான முக்கியக் குடிமைப் பணிகளை /சேவைகளைத் தொடர்ந்து பராமரித்தல்

2. குறைந்த அளவு பணிகளுக்கான மாதிரி வரைமுறைகள்

3. தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகளின் செலவு வகையிலும் கூடுதல் முதலீடு வகையிலும் ஆகக் கூடிய தேவை அளவிலான முதலீடு

4. நிதி ஆதாரங்களைப் பெருக்குதல்

5. போதிய அதிகாரங்களைக் கொண்ட அமைப்பு ரீதியிலான ஒரு நல்ல செயலாக்க அமைப்பு.

**1.4.13.** எனவே, முக்கிய குடிமைப்பணிகள், வழங்குவதற்கான அளவுகள், நிதி ஆதாரங்களைப் பெருக்குதல்; சமமான பங்கீட்டு ஏற்பாட்டை உருவாக்கவும் போதிய அதிகாரங்கள் நடைமுறைகள், பதில்சொல்ல வேண்டிய பொறுப்பு ஆகியவற்றுடன் உள்ளாட்சி மன்றங்களின் அமைப்பு முறையை உருவாக்குதல் ஆகியவற்றுக்கான வரைமுறைகளை வகுப்பதற்காக தனி ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. அரசு ஒப்புதலுடன் பின்வருமாறு மூன்று சிறப்பு முகவரமைப்புகள் பணிக்குழுக்களாக நியமனம் செய்யப்பட்டன:-

| | பணிக்குழுவின் பெயர் | அவர்களுக்கு ஒப்படைக்கப்பட்ட பணி |
|---|---|---|
| 1. | அண்ணா மேலாண்மை நிறுவனம் - சென்னை (Anna Institute of Management) | உள்ளாட்சி மன்றங்களின் அமைப்பு முறையும், அதிகாரங்களும் |
| 2. | திருவாளர்கள் கிர்லோஸ்கர் - கன்சல்டண்ட்ஸ் லிமிடெட், சென்னை (M/s Kirlosker Consultants) | முக்கியக் குடிமைப்பணிகள், அவற்றின் இயக்க - பராமரிப்புக்கான வரைமுறைகள் . ஆகக்கூடிய செலவும் ஐந்தாண்டுகளுக்கான தேவை பற்றிய மதிப்பீடுமற்றும் தனியார்மயமாக்கலுக்கு வாய்ப்புள்ள துறைகள் |
| 3. | நிதி நிருவாக, ஆராய்ச்சி நிறுவனம் - சென்னை (Instittute for Financial Management and Research) | வரி, மற்றும் வரியல்லாத ஏனைய நிதி ஆதாரங்களைப் பெருக்குதல் - ஐந்தாண்டுகளுகக்குத் தேவைப்படும் நிதியாதாரங்களின் உருவாக்கம் பற்றிய மதிப்பீடு, உள்ளாட்சி மன்றங்களுக்கு நிதியை சமமாகப் பகிர்ந்தளிக்கும் கோட்பாடுகளை வகுத்தல். |

**1.4.14.** பணிக் குழுக்களைச் சேர்ந்த உறுப்பினர்கள், தமிழ்நாடு மாநில நிதி ஆணையத்தைச் சேர்ந்த அலுவலர்களுடன் இடையறாது தொடர்பு கொண்டிருந்ததோடு, இவ்வாணையம் ஏற்பாடு செய்திருந்த பெரும்பாலான கூட்டங்கள், கருத்தரங்குகள் போன்றவற்றிலும் கலந்து கொண்டனர். மாநில நிதி ஆணையம் வினாப்பட்டியல் மூலம் சேகரித்த அனைத்து புள்ளிவிவரங்களும் அவர்களுக்கு அளிக்கப்பட்டன. இந்தப் பணிக்குழுக்கள் அளித்த தகுதிநிலை அறிக்கைகள், அவ்வப்போது தமிழ்நாடு மாநில நிதி ஆணையத்தால் ஆய்வு செய்யப்பட்டது. நிபுணர்களின் ஆலோசனைகள் தேவைப்பட்டபோது துறைத்தலைவர்கள், அந்தந்த கழகங்கள்,

வாரியங்கள், நிறுவனங்களைச் சேர்ந்த பிரதிநிதிகள் அழைக்கப்பட்டு மாநில நிதி ஆணையத்தின் அலுவலர்கள் முன்னிலையில், பணிக்குழு உறுப்பினர்களோடு கலந்து விவாதிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டது. இந்த பணிக்குழுக்களின் இறுதி அறிக்கைகள் பெறப்பட்டு மாநில நிதி ஆணையத்தால் ஆய்வு செய்யப்பட்டன. மாநில நிதி ஆணையத்திற்கு ஏற்புடையவையெனக் கருதப்பட்ட அக்குழுக்களுடைய பரிந்துரைகளில் எடுத்தாளப்பட்டு தமிழ்நாடு மாநில நிதி ஆணையத்தின் அறிக்கையில் சேர்க்கப்பட்டன.

ஏனைய மாநிலங்கள்/ நிறுவனங்களுக்கு சென்று வந்தது:

**1.4.15.** தமிழ்நாடு மாநில நிதி ஆணைய உறுப்பினர்கள் தமிழ்நாட்டிற்குள்ளும், தமிழ்நாட்டிற்கு வெளியேயும் சுற்றுப்பயணம் செல்வதற்கு அரசு, நிதித் துறையின் (ஆதாரங்கள்) 1.2.1995 ஆம் நாளிட்ட, 73ஆம் எண் அரசாணையில் அனுமதி வழங்கியது. அதன்படி, தமிழ்நாடு மாநில நிதி ஆணையத்தின் உறுப்பினர்களும், தெரிந்தெடுக்கப்பட்ட அலுவலர்களும் ஒரு குழுவாகவும், தனித்தனியாகவும் தமிழ்நாடு மாநிலத்திற்குள்ளும், வெளியேயும் தேர்ந்தேடுக்கப்பட்ட இடங்களுக்கு சுற்றுப்பயணம் செய்து, உள்ளாட்சி மன்றங்களைச் சேர்ந்த பல்வேறு அலுவலர்களுடனும் நிருவாகிகளுடனும் அந்தந்த மாநில நிதி ஆணையங்களின் உறுப்பினர்கள் / அலுவலர்களுடனும் கலந்து விவாதித்தனர். குழுவாகவும்/தனியாகவும் பயணம் மேற்கொண்ட பிற மாநிலங்கள் விபரம் பின்வருமாறு:–

1. கர்நாடகம்
2. ஆந்திர பிரதேசம்
3. கேரளம்
4. மகாராஷ்டிரம்
5. மேற்கு வங்காளம்
6. ஒரிசா
7. டெல்லி

**1.4.16.** தமிழ்நாட்டிலிருந்து சென்ற மாநில நிதி ஆணையத்தைச் சேர்ந்த குழுவினர் மேற்குறிப்பிட்ட மாநிலங்களில் அவர்களுக்கு ஒத்த நிலையிலுள்ள அலுவலர்களைச் சந்தித்து பேசினர். அவர்கள் கூட்டங்களுக்கும், கருத்தரங்கங்களுக்கும் மற்றும் பல்வேறு இடங்களைப் பார்வையிடவும், ஏற்பாடு செய்திருந்ததுடன், அம்மாநிலங்களில் மேற்கொள்ளப்பட்ட ஜனநாயகப் பரவலாக்கல் முறை குறித்து தமிழ்நாடு மாநில நிதி ஆணையத்தைச் சேர்ந்த குழுவினருக்கு விளக்கிக் கூறினர்.

**1.4.17.** இப்பயணங்களின் மூலம், தமிழ்நாடு மாநில நிதி ஆணையம் பெரிதும் பயனடைந்தது. இப்பயணங்கள் ஏனைய மாநிலங்களிலுள்ள உள்ளாட்சி மன்றங்களின் செயல்பாடு குறித்த பல விவரங்களைத் தெரிந்து கொள்ள முடிந்தது. இப்பயணங்களில் கிடைத்த அனுபவங்களிலும் இந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளன.

தேசிய அளவிலான கருத்தரங்குகளில் பங்கு கொள்ளுதல்

**1.4.18.** மாநில நிதி ஆணையத்தின் தலைவரும், உறுப்பினர் செயலாளரும், புது டில்லியில் 28.10.1994, 29.10.1994 ஆகிய நாட்களில் திட்டக்குழு ஏற்பாடு செய்திருந்த மாநில நிதி ஆணையங்களின் தேசிய அளவிலான கூட்டத்திலும் பின்பு 19.3.95 அன்று ஐதராபாத்திலும், 3.7.1995 அன்று முசௌரியிலும் நடைபெற்ற தேசிய அளவிலான கருத்தரங்குகளிலும் கலந்து கொண்டனர். தமிழ்நாடு மாநில நிதி ஆணையத்தின் தலைவர் திரு. ரெ.ஆறுமுகம், இ.ஆ.ப., அவர்களும்,

உறுப்பினர்—செயலர் திரு. ரமேஷ்ராம் மிஷ்ரா, இ.ஆ.ப., அவர்களும் 1995 நவம்பர் 3,4 ஆகிய நாட்களில் புது டில்லியில் நடைபெற்ற தேசிய அளவிலான நான்காவது கருத்தரங்கில், தமது முடிவான பரிந்துரைகளை அளித்த இரண்டு செயல்முறைக் குழுக்களுக்கு உறுப்பினர்களாக தேர்ந்தெடுக்கப்படும் வாய்ப்பைப் பெற்றனர். மேற்கூறிய செயல்முறைக்குழுக்கள் 3.7.95 அன்று முசௌரியில் நடைபெற்ற தேசிய அளவிலான மூன்றாவது கருத்தரங்கில் எடுக்கப்பட்ட முடிவையொட்டி பின்வரும் கூறுகள் பற்றி ஆய்வு செய்வதற்காக அமைக்கப்பட்டவையாகும்.

1. உள்ளாட்சி நிதி புள்ளிவிவரத் தகவல் ஆதாரம்
2. திட்டப்பணிகள், திட்டம் சாராப் பணிகளையொட்டிய உள்ளாட்சி மன்றங்களின் செயல்முறை ஆட்சிப் பகுதி
3. செலவு குறித்த வரைமுறைகள்
4. நிதி ஆதாரங்களைப் பெருக்குதல்
5. உள்ளாட்சி மன்றங்களுக்கு நிதிமாற்றுதல்

**1.4.19.** பத்தாவது நிதிக் குழு பரிந்துரை செய்த மானியங்களை உள்ளாட்சி மன்றங்கள் பயன்படுத்துவதற்குரிய வழிகாட்டி குறிப்புகளையும், தக்க ஏற்பாடுகளையும் பரிந்துரைப்பதற்காக மத்திய அரசால் அமைக்கப்பட்ட குழுவின் முதல் கூட்டத்தில் 24.6.96 அன்று புதுடெல்லியில் நடைபெற்ற தமிழ்நாடு மாநில நிதி ஆணையத்தின் உறுப்பினர்—செயலர் திரு ரமேஷ்ராம் மிஷ்ரா அவர்கள் கலந்து கொண்டார்.

**1.4.20.** இந்தத் தேசிய கருத்தரங்குகளில் தமிழ்நாடு மாநில நிதி ஆணையத்தின் முதுநிலை அதிகாரிகளின் பங்கேற்பு ஆணையம், தமது பரிந்துரைகளை உறுதி செய்வதற்கு முன்னர், தமிழ்நாடு உள்ளாட்சி மன்ற அமைப்புகளின் கள அலுவலர்களுடன் அதுபோன்ற கூட்டங்களை நடத்துவதற்கு ஊக்கமளித்தது.

மாநாடுகள் மற்றும் கருத்தரங்குகளை நடத்துதல்

**1.4.21.** தமிழ்நாட்டில் உள்ளாட்சி மன்ற அமைப்புகள், மூன்று துறைத் தலைவர்களின் கீழ் அதாவது, நகராட்சி நிருவாக இயக்குநர், ஊரக வளர்ச்சித்துறை இயக்குநர், பேரூராட்சிகளை இயக்குநர் ஆகியோரின் நிருவாகத்தின் கீழ் வருகின்றன. புதிய அரசியலமைப்புத் திருத்தச் சட்டங்கள் (73வது—74வது திருத்தங்கள்) நடைமுறைக்கு வந்ததையடுத்து, இத்துறைகளில் பணிபுரியும் பணியாளர்களின் திறமையை தமிழ் நாட்டில் உள்ளாட்சி அமைப்பு நிருவாகம் நிதிவகையில் தனித்தியங்கக் கூடியதாகவும், வலுவானதாகவும் இருக்கும் வகையில் மேம்படுத்தப்பட வேண்டும். எனவே, அவர்களைச் சந்தித்து அரசியலமைப்புச் சட்டத் திருத்தங்களின்படி, தமிழ்நாட்டில் உள்ளாட்சி மன்ற அமைப்பை மேம்படுத்துவதில் எதிர்நோக்கக் கூடிய பல்வேறு பிரச்சினைகளின் சாதக—பாதகங்கள் பற்றி விவாதித்து அவர்க்ளின் பரந்த அனுபவங்களால் விளைந்த அரிய கருத்துக்களைப் பெறுவதென முடிவு செய்யப்பட்டது. அதன்படி, தமிழ்நாடு மாநில நிதி ஆணையம், மொத்தத்தில் 100க்கும் மேற்படாமல் ஒவ்வொரு உள்ளாட்சி மன்றத்திலிருந்தும் பிரதிநிதிகளைத் தேர்ந்தேடுத்து மாநாடுகளையும் கருத்தரங்குகளையும் நடத்துமாறு இந்த மூன்று துறைத் தலைவர்களுக்கும் அழைப்பு விடுத்தது.

**1.4.22.** முதல் மாநாடு பேரூராட்சிகளின் நிர்வாக அலுவலர்களைக் கொண்டு 15.2.96, 16.2.96 ஆகிய நாட்களில் சென்னை, பனகல் கட்டிட மாநாட்டுக் கூடத்தில் நடைபெற்றது. இரண்டு நாட்களிலும் 6 அமர்வுகள் நடைபெற்றன. ஒவ்வொரு தொழில்நுட்பக் கூட்டத்திலும் விவாதிக்கப்பட்ட பொருள்கள், கூட்டத்திற்குத் தலைமை வகித்த அரசு முதுநிலை அலுவலர்கள் பற்றிய

விவரங்கள்இணைப்பு–8ல் கொடுக்கப்பட்டுள்ளன. இறுதியான பரிந்துரைகள் தொகுக்கப்பட்டு, சென்னை, பேரூராட்சிகள் ஆணையாளரால், அறிக்கை வடிவில் மாநில நிதி ஆணையத்திடம் அளிக்கப்பட்டது.

**1.4.23.** இரண்டாவது மாநாடு, 26.2.96, 27.2.96 நாட்களில், சென்னை நகராட்சி நிருவாக ஆணையாளரால் கூட்டப்பட்டது. சென்னையில் நடைபெற்ற இம் மாநாட்டில் ஏறக்குறைய அனைத்து மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளின் ஆணையர்கள் கலந்து கொண்டனர். இரண்டு நாட்கள் நடைபெற்ற இம்மாநாட்டில் ஆறு அமர்வுகள் நடைபெற்றன. பல்வேறு அலுவலர்கள் தலைமைத்தாங்கிய தொழில்நுட்பக் கூட்டங்களின் விவரங்கள் இணைப்பு–9ல் கொடுக்கப்பட்டுள்ளன. மேற்படி ஆறு தொழில்நுட்பக் கூட்டஙகளின் இறுதியான பரிந்துரைகள், அறிக்கை வடிவில் மாநில நிதி ஆணையத்திடம் அளிக்கப்பட்டது.

**தேசிய அளவிலான மாநாடு:**

**1.4.24.** நாட்டின் பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த அறிஞர்களை ஒரே இடத்தில் கூடச் செய்து அவர்களுடைய எண்ணப் பரிமாற்றங்கள் மூலம் பயனுள்ள கருத்துக்களைப் பெறுவதற்காக தமிழ்நாடு மாநில நிதி ஆணையம், எம்.எஸ்.சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம் மற்றும் சென்னை பொருளாதார ஆய்வு நிறுவனம் ஆகியவற்றின் கூட்டு முயற்சியுடன், சென்னையில் 14.3.96, 15.3.96 நாட்களில் உள்ளாட்சி மன்றங்களின், நிதிநிலை என்ற பொருள் குறித்து தேசிய மாநாடு ஒன்றை நடத்தியது. கருத்துக்களை பரிமாறிகொள்ளவும், உள்ளாட்சி மன்ற நிதி குறித்து நாட்டின் பல்வேறு பகுதிகளில் நிலவும் எண்ணங்களைத் தெரிந்து கொள்ளவும் பல மாநிலங்களைச் சேர்ந்த பேரறிஞர்கள், அறிஞர் பெருமக்கள், வல்லுநர்கள் , பல மாநிலங்களைச் சேர்ந்த முதுநிலை நிருவாகிகள் இம் மாநாட்டிற்கு அழைக்கப்பட்டனர். இம்மாநாடு நடைபெற்ற இரண்டு நாட்களில், அதாவது 14.3.96, 15.3.96 நாட்களில் ஐந்து தொழில் நுட்ப அமர்வுகள் நடைபெற்றன.

இம்மாநாட்டில் சென்னை பொருளாதார ஆராய்ச்சி நிறுவனத்தின் தலைவரும், புதுடில்லி, பொது நிதி கொள்கை தேசிய நிறுவனத்தின் தலைவருமான டாக்டர் இராஜா ஜெ. செல்லையா, எம்.எஸ். சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனத்தின் நிறுவன இயக்குநர் டாக்டர் எம்.எஸ்.சுவாமிநாதன், தமிழ்நாடு அரசின் ஒய்வுபெற்ற தலைமைச் செயலர் திரு. வி.கார்த்திகேயன், தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலாளர் திரு.என். ஹரிபாஸ்கர், இ.ஆ.ப., மாநில நிதி ஆணையத்தின் தலைவர் திரு.ரெ.ஆறுமுகம் ஆகியோர் கலந்து கொண்டனர். இந்த தொழில்நுட்பக் கூட்டங்களில் தலைமை வகித்து ஆய்வுக் கட்டுரைகளை வழங்கிய அறிஞர்கள், மாநாட்டில் கலந்து கொண்டவர்கள் ஆகியோர் பற்றிய விவரங்கள் இணைப்பு–10ல் கொடுக்கப்பட்டுள்ளன.

**1.4.25.** தொழில்நுட்பக் கூட்டங்களின் இறுதி பரிந்துரைகள் தலைமை வகித்த அறிஞர்களால் நிறைவு விழாவின்போது அளிக்கப்பட்டன. மாநாட்டில் தெரிவிக்கப்பட்ட கருத்துக்கள், பங்கேற்ற அறிஞர்கள் அளித்த ஆய்வுக்கட்டுரைகளோடு சேர்த்து புத்தக வடிவில் அச்சிடப்பட்டன. இந்தத் தேசிய மாநாடு, தமிழ்நாட்டில் உள்ளாட்சி மன்ற நிருவாக முறையை வெற்றிகரமாக செயல்படுத்தவும், மேம்படுத்தவும் புதிய கருத்துக்களையும், ஆலோசனைகளையும் வழங்கியது, மாநில நிதி ஆணையத்திற்கு உண்மையில் பயனுள்ளதாக இருந்தது.

அரசு செயலாளர்களுடனான சந்திப்புகள்:

**1.4.26.** 1992 ஆம் ஆண்டு அரசியலமைப்பு (73–வது 74–வது திருத்தம்) சட்டங்கள் நிறைவேற்றப்பட்டதையடுத்து, உள்ளாட்சி மன்றங்களுக்குப் பிரித்து வழங்கப்பட வேண்டிய பணிகள் பற்றிய விவரங்கள், அரசியலமைப்புச் சட்டத் திருத்தங்களின் 11 / 12வது விவர அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளன. மாநில அரசு, ஊரகப்பகுதி உள்ளாட்சி மன்றங்களுக்கு மேற்படி சட்டத்தின் 4–வது விவர அட்டவணையின் கீழ் 29 இனங்களையும், நகர்ப்பகுதி உள்ளாட்சி மன்றங்களுக்கு மேற்படி சட்டங்களின் 10வது மற்றும் 11வது விவர அட்டவணையின்கீழ் 18 இனங்களையும் சேர்த்துள்ளது.

**1.4.27.** உள்ளாட்சி மன்றங்களுக்கு இந்த பணிகளைப் பகிர்ந்தளிப்பதினால், சில சட்டங்களில், விதிகளில் அல்லது நிருவாக உத்தரவுகளில் சில திருத்தங்கள் செய்ய வேண்டியிருக்கும். இதனையொட்டி , தமிழ்நாடு மாநில நிதி ஆணையம், சம்பந்தப்பட்ட உள்ளாட்சி மன்றங்களுக்கு நிதிகளை மாற்றுவது தொடர்பாக கருத்துக்களைக் கேட்டுப் பெறவும், ஒரு முடிவுக்கு வரவும் ஏதுவாக, தமிழ்நாடு அரசின் சம்பந்தப்பட்ட துறைச் செயலாளர்கள், மற்றும் அவர்களின் நிருவாகக் கட்டுப்பாட்டின்கீழ் வரும் துறைத் தலைவர்கள் ஆகியோரின் கூட்டங்களை நடத்தியது. இந்த பணிகள் மாற்றம், மாநில நிதி ஆணையத்தின் பரிந்துரைகளில் முக்கிய இடம் பெற்றுள்ளது.

அரசு செயலாளர்கள் கூட்டங்கள் பற்றிய விவரங்கள் வருமாறு:–

| | | | |
|---|---|---|---|
| 1. | 07.2.1995 | – | திரு எம் . அகமது, இ.ஆ.ப., அரசு செயலர், கால்நடை வளர்ப்பு மற்றும் மீன்வளத்துறை & ஏனையோர். |
| 2. | 08.12.1995 | – | திருமதி சி.கே.கரியாலி , இ.ஆ.ப., அரசு செயலர், சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை & ஏனையோர். |
| 3. | 12.12.1995 | – | திரு. டி.ஆர்.சீனிவாசன், இ.ஆ.ப., அரசு செயலர், கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை & ஏனையோர். |
| 4. | 21.12.1995 | – | திரு ஆர்.செல்லமுத்து, இ.ஆ.ப., அரசு செயலர், கைத்தறி, கைவினைப் பொருள்கள், துணிகள், மற்றும் கதர்த்துறை & ஏனையோர். |
| 5. | 22.12.1995 | – | திருமதி சூசன் மாத்யூ இ.ஆ.ப., அரசு செயலர், எரிசக்தித் துறை & ஏனையோர். |
| 6. | 28.12.1995 | – | திரு. ஆர் . பூர்ணலிங்கம், இ.ஆ.ப., அரசு செயலர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை & ஏனையோர். |
| 7. | 03.01.1996 | – | திரு தேபேந்திரநாத் சாரங்கி, இ.ஆ.ப., அரசு செயலர், வீட்டுவசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சித்துறை & ஏனையோர். |

| | | | |
|---|---|---|---|
| 8. | 05.01.1996 | – | திரு.பி.நடேசன், இ.ஆ.ப., அரசு செயலர், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை & ஏனையோர். |
| 9. | 09.01.1996 | – | திரு எச்.எம்.பாண்டே,இ.ஆ.ப., அரசு செயலர், தொழிலாளர் நலன்மற்றும் வேலைவாய்ப்புத் துறை & ஏனையோர். |
| 10. | 10.01.1996 | – | திரு பி.பாஸ்கரதாஸ், இ.ஆ.ப., அரசு செயலர், பொதுப்பணித் துறை & ஏனையோர். |
| 11. | 07.02.1996 | – | திரு எஸ்.எம். மெய்கண்டதேவன், இ.ஆ.ப., அரசு செயலர், வருவாய்த்துறை & ஏனையோர். |
| 12. | 07.02.1996 | – | திரு என்.ஆதிமூலம், இ.ஆ.ப., அரசு செயலர், சிறுதொழில்கள் துறை & ஏனையோர். |
| 13. | 09.02.1996 | – | திரு வி.மணிவண்ணன், இ.ஆ.ப., அரசு செயலர், சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை & ஏனையோர். |
| 14. | 12.02.1996 | – | திருமதி கிரிஜா வைத்தியநாதன், இ.ஆ.ப., அரசுக் கூடுதல் செயலர், கல்வி, அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறை & ஏனையோர். |
| 15. | 20.02.1996 | – | திருஆர்.சி.பாண்டா, இ.ஆ.ப. ,அரசு செயலர், வேளாண்மைத்துறை & ஏனையோர். |
| 16. | 22.02.1996 | – | டாக்டர். எஸ். நாராயண், இ.ஆ.ப., அரசு செயலர் , ஊரக வளர்ச்சித்துறை & ஏனையோர். |

**1.4.28.** தமிழ்நாடு அரசின் இச்செயலாளர்க்ளுடன் நடத்தப்பட்ட விவாதங்களின் சிறப்பு அம்சங்கள் பற்றி பின்னர் அவர்களுக்குத் தெரிவிக்கப்பட்டது. அவர்கள், தத்தம் நிலையில் அவர்களது துறைத் தலைவர்களின் கூட்டங்கள் நடத்தி, உள்ளாட்சி மன்றங்களுக்கு அந்தந்தத் துறைகளிலிருந்து பணிகள், நிதிகள் மற்ற பணியாளர்களைப் பிரித்துக் கொடுப்பது தொடர்பாக, தேவையான அரசாணைகளைப் பிறப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டனர். இதுவரை கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை மட்டுமே **4.4.96** ஆம் நாளிட்ட **84**ஆம் எண் அரசாணையைப் பிறப்பித்துள்ளது..

**நிதிகளைத் திரட்டுகின்ற மற்றும் நிதிகளைப் பயன்படுத்துகின்ற துறைகளுடனான சந்திப்பு.**

**1.4.29.** நிதி ஆதாரங்களைப் பெருக்குவதற்கான வாய்ப்புகள் குறித்தும் நிதி வீணாவதைத் தடுப்பது குறித்தும் ஆய்வு செய்யவும், பின்பற்றப்பட்ட பல்வேறு விலைகளின் யூனிட் அடக்க மதிப்பையும் தற்போதைய பணி அளவுகளையும் சரிபார்க்கவும், மேலும் அவசியத் தேவை அளவிலான குடிமைப்பணி நிலையை எய்துவதற்கான சாத்திய கூறுகள் குறித்தும் மற்றும் அதற்கு ஆகக் கூடிய செலவுப் பொறுப்பையும் மதிப்பிட கீழ்க்கண்ட நிதிகளைத் திரட்டும் துறைகளின் அதிகாரிகளுடன் விவாதிக்கப்பட்டது:

1. வணிகவரித்துறை ஆணையாளர்
2. பத்திரப்பதிவுத்துறை தலைவர்
3. போக்குவரத்து ஆணையாளர்
4. நிலவருவாய் ஆணையாளர்
5. மண்ணியல் மற்றும் சுரங்கதுறை ஆணையாளர்
6. தமிழ்நாடு மின்சாரவாரியத் தலைமைப் பொறியாளர்
7. தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய நிர்வாக இயக்குநர்
8. பொதுப்பணித்துறை தலைமைப் பொறியாளர்
9. நெடுஞ்சாலை–கிராமப்பணிகள் துறை தலைமைப் பொறியாளர்
10. சுகாதாரம் மற்றும் குடும்பநலத் துறை இயக்குநர்
11. சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமம்
12. நகர மற்றும் நாட்டுப்புற அமைப்புத் திட்ட இயக்குநர்

**1.4.30.** இந்தக் கூட்டங்களில், நடைமுறைகளை எளிதாக்குவது, உள்ளாட்சி மன்றங்களுக்காக அரசு வசூலித்த வருவாய் வரவும், அவற்றின் பங்கீடும், பணி அளவுகளின் நிலைகள், வரைமுறைகள், பணியாளர்கள், திட்டங்களைச் செயல்படுத்துவதில் நிருவாக இடர்பாடுகள் போன்றவை குறித்து மிகவும் ஆழ்ந்து விவாதிக்கப்பட்டது. இக்கூட்டங்களில், மாமநில நிதி ஆணையத்தால் ஏற்படுத்தப்பட்ட மூன்று பணிக் குழு பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்.

**1.4.31.** உள்ளாட்சி மன்றங்கள் சிறந்த முறையில் செயல்படுவதற்கும், நிதி திரட்டுவதற்கும், நிதியைப் பயன்படுத்துவதற்கும் அவை பின்பற்ற வேண்டிய நடைமுறை பற்றியும் தங்களுடைய பரிந்துரைகளையும், அறிக்கைகளையும், அளிக்குமாறு உள்ளாட்சி மன்ற துறைத்தலைவர்கள், அதாவது நகராட்சி நிருவாக இயக்குநர், பேரூராட்சிகள் இயக்குநர், ஊரக வளர்ச்சி இயக்குநர் ஆகியோர் கேட்டுக் கொள்ளப்பட்டனர்.

ஒருங்கிணைப்புத் துறைகளுடனான (Nodal Departments) சந்திப்பு:

**1.4.32.** உள்ளாட்சி மன்றங்களின் நிதி நிலையை மேம்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் உள்ளாட்சி மன்றங்களுக்கு மாநில அரசிடமிருந்து கிடைக்கக் கூடிய நிதியை பகிர்ந்தளிப்பதற்கான கோட்பாடுகளை பகுத்தளிக்க வேண்டும் என்ற அவாவின் காரணமாகவும் தமிழ்நாடு மாநில நிதி ஆணையம், ஒருங்கிணைப்புத் துறைகளுடன் (Nodal Departments) அதாவது நிதித்துறை, ஊரக வளர்ச்சித் துறை, நகராட்சி நிருவாக மற்றும் குடிநீர் வழங்கல் துறை ஆகிய துறைகளுடன் விரிவாக வாதித்தது. அந்த விவாதத்தின்போது தெரிவிக்கப்பட்ட கருத்துக்களை மனதிற்கொண்டு தமிழ்நாடு மாநில நிதி ஆணையம், நகர்ப்பகுதி மற்றும் ஊரக உள்ளாட்சி மன்றங்களுக்கு நிதி ஆதாரங்களை ஒதுக்கீடு செய்யும் ஏற்பாட்டினை வடிவமைத்துள்ளது.

**1.4.33.** நிதி ஆதாரங்களை ஒதுக்கீடு செய்யும் இந்த ஏற்பாடு குறித்து, ஊரக வளர்ச்சித் துறை நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசு செயலர்களான டாக்டர் எஸ்.நாராயண், இ.ஆ.ப., அவர்களுடனும் திருமதி மாலதி, இ.ஆ.ப., அவர்களுடனும் தனித்தனியாக, இருநாட்களில் அதாவது 18.6.96, 23.7.96 ஆகிய நாட்களில் சீரிய முறையில் விவாதிக்கப்பட்டது. அவர்களுடைய கருத்துக்கள் கோரப்பட்டன. அவர்களுடைய நிருவாகக் கட்டுப்பாட்டின் கீழுள்ள உள்ளாட்சி மன்றங்களின் மொத்த நிதித் தேவைகளைக் குறிப்பிட்டு தமிழ்நாடு மாநில நிதி ஆணையத்தின் பரிசீலனைக்காக குறிப்பானை ஒன்றை அளிக்குமாறும் அவர்களிடம் கோரப்பட்டது.

**1.4.34.** மாநில நிதி ஆணையம் நிதித் துறையின் அரசு செயலாளரை நான்கு வெவ்வேறு நாட்களில் அதாவது 18.4.96, 8.10.96 ஆகிய நாட்களில் திரு பி.வி. இராஜாராமன், இ.ஆ.ப., அவர்களையும் 29.5.96, 15.7.96 ஆகிய நாட்களில் டாக்டர் எஸ். குருமூர்த்தி, இ.ஆ.ப., அவர்களையும் சந்தித்து விவாதித்தது. இச் சந்திப்புகளின்போது மாநில அரசிடமிருந்து உள்ளாட்சி மன்றங்களுக்கு வழங்கப்படும் நிதி குறித்து விரிவாக விவாதிக்கப்பட்டது. தமிழ் நாடு மாநில நிதி ஆணையத்தின் பரிசீலனைக்காக மாநில அரசுக்கு இருக்கும் நிதிப் பொறுப்புகள், நிதி இடர்பாடுகள் குறித்தும், நிதித்துறையால் உள்ளாட்சி மன்றங்களுக்கு வழங்க இயலக் கூடிய கூடுதல் தொகை ஆகிய விவரங்கள் அடங்கிய அறிக்கை ஒன்றை அளிக்குமாறு பெறப்பட்ட தகவல்களைக் கொண்டு தயாரிக்கப்பட்ட அடுத்த ஐந்தாண்டுகளுக்குரிய மாநில நிதி நிலை பற்றிய மதிப்பீட்டினை அடிப்படையாகக் கொண்டு, மாநில நிதி ஆணையம் நகர்ப்பகுதி/ஊரகப்பகுதி உள்ளாட்சி மன்றங்களின் பல்வேறு அடுக்கு நிலைகளுக்கு, அரசு நிதியை ஒதுக்கீடு செய்வது, பகிர்ந்து அளிப்பது தொடர்பான கோட்பாடுகளை வகுத்துள்ளது.

**பணிச் சங்கங்கள் மற்றும் ஓய்வூதியர்களுடனான கூட்டங்கள்:**

**1.4.35.** இன்றைய சூழ்நிலையில், எந்தவொரு உள்ளாட்சி மன்றத்தின் விவகாரங்களிலும் எடுக்கப்படுகின்ற முடிவானது, சட்ட நிலைமைகளில் அல்லது வளர்ச்சித் திட்டங்களில் மாற்றங்கள் செய்யப்படுவதன் காரணமாக எழக்கூடிய புதிய சூழல்களில், விமர்சனங்களுக்கு வழி வகுக்கக் கூடும் அல்லது பாராட்டுதல்களைப் பெற்றுத்தரக்கூடடும் என்பதால், இவ்வாறு முடிவு எடுப்பது, பொது நிர்வாகத் துறையின் ஒரு சிறப்பு அம்சமாகிவிட்டது . நாட்டிலுள்ள உள்ளாட்சி மன்றங்களின் நிதி மற்றும் சமூக அந்தஸ்த்தை சீரமைக்கும் பணியில் ஏராளமான விமர்சனங்கள் எழக்கூடும்/ பாராட்டுதல்கள் கிடைக்கக் கூடும். இதனைக் கருத்திற் கொண்டு தமிழ்நாடு மாநில நிதி ஆணையம், 73 ஆவது 74வது அரசியலமைப்புச் சட்ட திருத்தம் குறித்து பொதுமக்கள், சீர் பெருமக்கள், வல்லுநர்களின் கருத்தைப் பெறுவதற்காக, தலைமையிடங்களிலும், மண்டல அளவிலும் சிறப்புக் கூட்டங்களை நடத்தியது. நகராட்சிகள், பேரூராட்சிகளைச் சேர்ந்த பணிச் சங்கங்களும், 14.5.96 அன்று நிதி ஆணையத்தின் தலைவரைச் சந்தித்து தங்களுடைய கருத்துக்களடங்கிய அறிக்கையை அளித்தன. ஊரக மற்றும் நகர்ப்பகுதி உள்ளாட்சி மன்றங்களைச் சேர்ந்த ஓய்வு பெற்ற பணியாளர்களும், அலுவலர்களும் 1.7.1996 அன்று திருச்சிராப்பள்ளியில் தமிழ்நாடு மாநில நிதி ஆணையத்தைச் சந்தித்து விவாதித்ததுடன் அவர்களுடைய கருத்துக்களடங்கிய அறிக்கைகளையும் கொடுத்தனர். தமிழ்நாடு மாநில நிதி ஆணையத்தின் தலைவர், சில அலுவலர்களுடன் பல்வேறு மாவட்ட தலைமையிடங்களில் பொதுமக்களின் பிரதிநிதிகளைச் சந்தித்து அவர்களுடன் கலந்துரையாடியதன் மூலமும் அவர்கள் அளித்த அறிக்கை வாயிலாகவும் பயனுள்ள பல கருத்துரைகளையும், பரிந்துரைகளையும் பெற்றார்கள் “பொருளாதார ரீதியிலான அனைத்து சிந்தனைகளையும் ஏழை எளிய மக்களின் உண்மையான தேவைகளிலிருந்து தொடங்கி, வறிய மக்கள், தங்களுடைய வறுமையிலிருந்து அவர்களாகவே மீண்டுவருவதற்குத் தேவையான உதவியைச் செய்யுங்கள்” என்று காந்திஜி அவர்கள் அறிவுறுத்தியதற்கேற்ப, தமிழ்நாடு மாநில நிதி ஆணையம், இந்த சந்திப்பு, கூட்டங்களின் வாயிலாக மக்களின் உண்மையான தேவைகள் என்னவென்பதை அறிந்து, அவர்கள், பின்தங்கிய நிலையிலிருந்து விடுபட்டு முன்னேறுவதற்கு உதவவும், அடிமட்ட அளவிலான அமைப்புகளை மறுமலர்ச்சி அடையச் செய்யவும் அவர்களே தெரிவித்த பெரும்பாலான பரிந்துரைகளை இந்த அறிக்கையில் சேர்த்துள்ளன.

மாவட்ட அமர்வுகள்

**1.4.36.** உள்ளாட்சி மன்றங்கள் ஆற்றி வருகின்ற பணிகளை எவ்வாறு மேலும் சீரமைப்பது, அவற்றின் நிதி ஆதாரங்களை எவ்வாறு பெருக்கி வலுப்படுத்துவது, 73 / 74வது அரசியலமைப்புச் சட்டத் திருத்தங்களையொட்டி அவற்றுக்கு என்னென்ன அதிகாரங்கள் அளிக்கலாம் ஆகியன பற்றி முன்னாள் உள்ளாட்சி மன்றப் பிரதிநிதிகள், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள், தற்போதைய சட்டமன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், அலுவலர்கள், தொண்டு நிறுவனங்கள் ஆகியோரின் கருத்துக்களைக் கேட்றிவதற்காக, பின்வரும் மாவட்டங்களில் அமர்வுகள் நடத்தப்பட்டன.

| | | |
|---|---|---|
| 27.06.1996 | – | தென் ஆர்க்காடு வள்ளலார் மாவட்டம் |
| 02.07.1996 | – | திருச்சிராப்பள்ளி |
| 03.07.1996 | – | மதுரை |
| 09.07.1996 | – | இராமநாதபுரம் |
| 11.07.1996 | – | காமராசர் |
| 12.07.1996 | – | சிதம்பரனார் |
| 16.07.1996 | – | செங்கை–எம்.ஜி.ஆர் (தற்போதைய அண்ணா, எம்.ஜி.ஆர். மாவட்டங்கள்) |
| 17.07.1996 | – | திருவண்ணாமலை சம்புவராயர் |
| 24.07.1996 | – | கோயம்புத்தூர் |
| 25.07.1996 | – | பெரியார். |

**1.4.37.** இந்த மாவட்ட அமர்வுகளில் அப்பகுதியைச் சேர்ந்த தற்போதைய சட்டமன்ற உறுப்பினர்கள்/நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோருடன் பல அரசு சாரா அமைப்புகள், அறிஞர்கள், ஓய்வுபெற்ற அரசு அலுவலர்கள், பொதுமக்கள் ஆகியோரும் உற்சாகமாக கலந்து கொண்டு, மாநில நிதி ஆணையத்திற்கு பயனுள்ள ஆலோசனைகளை வழங்கினர். இது சமயம் மாவட்ட ஆட்சியர்கள் தங்கள் மாவட்ட உள்ளாட்சி மன்றங்களுக்கான நிதி தேவைகள் குறித்த அறிக்கைகளையும் தந்தனர்.

**1.4.38.** தமிழ்நாடு மாநில நிதி ஆணையம், ஒரு குழுவாகச் சென்று கருத்துக்களைக் கேட்டறியாத மாவட்டங்களில், மாநில நிதி ஆணையத்தின் உறுப்பினர்–செயலாளர், கீழ்க்கண்ட நாட்களில் சுற்றுப்பயணம் செய்து, சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சியர்கள், மாவட்ட ஊரக வளர்ச்சி முகவரமைப்புகளின் திட்ட அலுவலர், நகராட்சி நிருவாக மண்டல இயக்குநர், சம்பந்தப்பட்ட பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் ஆகியோருடன் கலந்து விவாதித்து, அவர்களின் அறிக்கைகளையும் பெற்று வந்துள்ளார்:

| | | |
|---|---|---|
| 10.7.1996 | – | கன்னியாகுமரி |
| 11.7.1996 | – | திருநெல்வேலி |
| 17.7.1996 | – | பெரம்பலூர் மற்றும் கரூர் |
| 18.7.1996 | – | திண்டுக்கல் |
| 25.7.1996 | – | தருமபுரி மற்றும் சேலம் |

**1.4.39.** சட்ட மன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், சீர் பெருமக்கள், வல்லுநர்கள், தொண்டு நிறுவனங்கள், முன்னாள் சட்ட மன்ற உறுப்பினர்கள், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோரிடமிருந்து பெறப்பட்ட அறிக்கைகள் சம்பந்தப்பட்ட மாவட்ட வாரியாகத் தொகுக்கப்பட்டு, அவற்றிலிருந்து முக்கியமான ஆலோசனைகள், கருத்துக்கள், பரிந்துரைகள் தேர்ந்தெடுக்கப்பட்டு இந்த அறிக்கையைத் தயாரிக்கும்போது பரிசீலிக்கப்பட்டன.

மாநில நிதி ஆணையத்தின் கூட்டங்கள்:

**1.4.40.** நிதித்துறையின் (ஆதாரங்கள்) 23.4.94 ஆம் நாளிட்ட 350 ஆம் எண் அரசாணையில், அரசால் அமைக்கப்பட்ட இம்மாநில நிதி ஆணையம், தமது நோக்கங்களை எய்துவதில் எல்லா நேரங்களிலும் ஒன்றுபட்ட உணர்வுடைய ஒரு குழுவாகச் செயல்பட்டது. இந்த ஆணையத்தில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் பணிகளின் முன்னேற்றம் குறித்து, ஐந்து உறுப்பினர்கள் குழு அவ்வப்போது ஆராய்ந்து, சொன்ன வழிகாட்டி குறிப்புகளை வகுத்தளித்தது. அரசியலமைப்புச் சட்டத்தின் 73–வது மற்றும் 74வது திருத்தங்களின் அடிப்படையில் ஒரு வலுவான நிதியமைப்பை உள்ளாட்சி மன்றங்களுக்கு ஏற்படுத்துவதற்காக மாநில நிதி ஆணையத்தின் உறுப்பினர்கள், இரண்டு மாதங்களுக்கு ஒருமுறை கூடி அதுவரையில் நடைபெற்றுள்ள பணிகளை ஆராய்ந்து, மேற்கொண்டும் எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து கருத்துக்களைப் பரிமாறிக் கொண்டனர். மாநில நிதி ஆணையம், கீழ்க் கண்டபடி ஒன்பது முறை கூடி பணி முன்னேற்றம் குறித்து ஆய்வு செய்து, கருத்துக்களைப் பரிமாறிக் கொண்டதுடன் அக்கருத்துக்களைச் செயற்படுத்துவதற்கு பின்பற்ற வேண்டிய வழிமுறைகளைக் குறித்தும் விவாதித்தது.

| | | | |
|---|---|---|---|
| 1. | முதல் அமர்வு | – | 20.10.1994 |
| 2. | இரண்டாவது அமர்வு | – | 17.03.1995 |
| 3. | மூன்றாவது அமர்வு | – | 14.07.1995 |
| 4. | நான்காவது அமர்வு | – | 12.10.1995 |
| 5. | ஐந்தாவது அமர்வு | – | 23.02.1996 |
| 6. | ஆறாவது அமர்வு | – | 31.05.1996 |
| 7. | ஏழாவது அமர்வு | – | 27.08.1996 |
| 8. | எட்டாவது அமர்வு | – | 27.09.1996 |
| 9. | ஒன்பதாவது அமர்வு | – | 11.11.1996 மற்றும் 12.11.1996 |

**1.4.41.** 12.11.1996 ஆம் நாளன்று இறுதியாக நடைபெற்ற மாநில நிதி ஆணையத்தின் அமர்வில் ஆணையத்தின் வரைவு அறிக்கை பரிசீலிக்கப்பட்டு ஏற்பளிக்கப்பட்டது..